# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 01.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16329/A/2024**

திருமதி. R.ஜமுனா -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
காங்கயம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம் - 638 701.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திருமதி. R.ஜமுனா அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு.மு.சுந்தரமூர்த்தி<br>பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம். திருப்பூர் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார் |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 02.09.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், முள்ளிபுரம் அஞ்சல், சித்தம்பலம் என்ற ஊரில் சர்வே எண் 670/4 மனை வரிபட்டா எண் 255-ல் நில ஆக்கிரமிப்பு சம்பந்தமாக, திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் பொது மக்கள் குறைதீர்க்கும் நாளில் 29.07.2024 அன்று மனு வழங்கப்பட்ட நாளில், காங்கயம் வட்டாச்சியர் பெற்று கொண்ட மனு மீது, வட்டாச்சியர் கையாண்ட அலுவலக கோப்பின் அனைத்து பக்கங்களின் சான்றிட்ட ஒளிநகல் உட்பட 6 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். | |

| | |
|---|---|
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ---- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 11.09.2024 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 26.10.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | 25.11.2024 |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 16.12.2024 |

2. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் மனுதாரருக்கு திரு.மு.சுந்தரமூர்த்தி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம். திருப்பூர் அவர்கள் ப.மு.2334/2024/அ9, 11.09.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத்தகவல் அலுவலராலும், ப.மு.3336/2024/அ9, 25.11.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம் அவர்களாலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என ஆணையத்தில் தெரிவித்து அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தனது மனுவில், தனது நிலத்தில் செய்யப்பட்டிருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக தான் மனு அளித்திருந்ததாகவும், ஆக்கிரமிப்புகளை அகற்றி தனது நிலத்தை தனக்கு ஒப்படைக்க கோரியிருந்ததாகவும், ஆனால் அது குறித்த தகவல்களை வழங்காமல் தகவல் வழங்க இயலாது என்று குறிப்பிட்டிருந்ததாகவும் தெரிவித்து, பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து உரிய தகவல் பெற்று வழங்கவும், ஆக்கிரமிப்புகளை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணையிடுமாறு கோரினார்.

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், ***பொதுத் தகவல் அலுவலரால் உரிய தகவல்கள் அளிக்கப்படவில்லை என ஆணையம் கருதுகிறது. எனவே, பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து பின்வருமாறு உத்தரவிடுகிறது :-***

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய தகவல்களுக்கு உரிய முழுமையான தகவல்களை <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் மனுதாரர் கோரிய இடத்தின் கூகுள் மேப் புகைப்படத்தையும் இணைத்து பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 29.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16329/A/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காங்கயம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம் - 638 701.

**<u>மனுதாரர்</u>**

திருமதி. R.ஜமுனா
112/1, சித்தம்பலம்,
முள்ளிபுரம் அஞ்சல்,
நத்தக்காடையூர்,
காங்கயம் வட்டம்,
திருப்பூர் - 638 108.

Copy to file

KRM/PA 03.07.2026